**ஹக்மன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜுலை 22 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜுலை 29 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹக்மன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள், மூலதனம், மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி முன்வைத்தலின் தவறு காரணமாக நிதி நிலைமை கூற்றுக்களில் அம் மீதிகளின் கூட்டுப் பெறுமதிக்கிடையில் ரூபா 5,540,360 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) அன்பளிப்பாக கிடைத்திருந்த 10 நடமாடும் கொட்டில்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 05 வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஒதுக்கம் ஏற்பாடு செய்யப்படாததன் காரணமாக அம் மீதி ரூபா 912,598 ஆல் குறைத்தும், ரோனியோ இயந்திரத்தின் ரூபா 212,800 ஆன பெறுமதி இருமுறை கணக்கிடப்பட்டமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி சமமான அளவால் கூட்டியும் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 9,264,112 ஆன 13 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு /பட்டோலைகளின் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையில் கூட்டுத்தொகை ரூபா 1,593,520 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 873,211 இற்கான தொங்கல் கணக்கில் வரவு மீதிக்கு வேண்டுமான செம்மையாக்கல் செய்து கணக்கை தீர்க்கப்பதற்கு மீளாய்வாண்டின் போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 227,740 ஆன 05 பெற வேண்டிய கணக்கு மீதிகளும், ரூபா 366,245 ஆன கடன்கொடுத்தோர் 42 மீதிகளும், ரூபா 1,707,092 ஆன நிலையான வைப்பு 12 மீதிகளும் நிலவிய போதிலும், அந் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 178,465,076 ஆன சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடும் மற்றும் வருடாந்த கணிப்பீடு அறிக்கைகளும், ரூபா 17,889,176 ஆன நாநாவித கடன்பட்டோர் மற்றும் ரூபா 22,840,763 ஆன நாநாவித கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகளும் பட்டோலைகளும், ரூபா 2,707,033 ஆன உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் மீதியை தொடர்பான நாளாதுவரையாக்கப்பட்ட பதிவேடும் மீதி உறுதிச்சான்றும், கூட்டுத்தொகை ரூபா 1,453,791 ஆன வைப்பு தொடர்பான விபரமான பட்டோலைகள் சமர்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்யப்பட முடியாமல் இருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பாதிடப்பட்ட மற்றும் குறைநிரப்பு அனுமதிக்கப்பட்ட செலவுடன் செலவின விடயங்களில் உள்ளவாறான செலவு, மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 193 பிரகாரம் கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,177,140 ஆன போதிலும், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் குறைந்த வருமானம் ரூபா 5,453,698 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 6,630,838 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் செலவின் சிறு குறைவொன்று காட்டப்பட்ட போதிலும், மொத்த மீண்டுவரும் வருமானத்தால் 97 சதவீதம் அளவான மொத்த மீண்டுவரும் செலவு நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் மற்றும் வருமான உதவி, போன்ற சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 36,150,010 | 21,844,304 | 14,305,706 | 34,972,870 | (20,667,164) |
| 2014 | 31,264,785 | 13,170,344 | 18,094,441 | 36,718,483 | (18,624,042) |
| 2013 | 27,081,849 | 11,457,687 | 15,624,162 | 29,522,751 | (13,898,589) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவியில் வளர்ச்சியொன்று காட்டப்பட்ட போதிலும், முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுய சம்பாதிப்பு வருமானத்தில் ரூபா 3,788,735 ஆன வீழ்ச்சி காட்டப்பட்டது.

(ii) சபையில் சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சி மூன்று வருடங்களிலும் கணிசமான உயர் பெருமானங்களால் மீண்டுவரும் செலவு அதிகரித்து இருந்தது.

(iii) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிக்கொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(iv) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (i) தொடக்கம் (iii) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயரத்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி முகாமை தொடர்பாக சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக தொடர்ந்து நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 செயற்பாட்டு மூலதன முகாமை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறை பொறுப்புக்கள் நிலவுதலின் காரணமாக செயற்பாட்டு மூலதனம் பூச்சிய பெறுமானத்தைப் பெற்றிருந்ததுடன் இது நிதி முகாமை தொடர்பில் சாதக நிலைமையொன்றன்று.

## 2.4 வருமான நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.4.1 வீத வரி

(அ) ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 548,220 வானதுடன், பற்றுச்சீட்டிடல் ரூபா 364,798 ஆக இருந்தது. நிலுவை மீதியின் 44 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 66 சதவீதம் அறவிடப்பட்டிருந்தன. ஆண்டு இறுதியில் நிலவிய நிலுவை மீதிகள் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆரம்பத்தில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 90,810 வானதுடன், பற்றுச்சீட்டிடல் ரூபா 7,790 ஆக இருந்தது. ஆரம்ப நிலுவையின் 12 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 39 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவை மீதிகள் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வாடகை வருமானம்

ஆரம்ப நிலுவை வாடகை வருமானம் மீதி ரூபா 275,212 வானதுடன், பற்றுச்சீட்டிடல் ரூபா 2,096,275 ஆக இருந்தது. ஆண்டுக்குள் ரூபா 2,145,358 அறவிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டு இறுதியில் நிலுவை மீதிகள் ரூபா 226,129 ஆனது.

### 2.4.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் முத்திரைக் கட்டணமாக ரூபா 4,943,745 வும் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 356,273 வும் பெற வேண்டியதாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

**3.1** சொத்துக்கள் முகாமைத்துவம்

பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

(i) பயன்படுத்தப்படாத கிரயம் ரூபா 3,520,000 ஆன 09 வண்டிகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததனால் அவைகள் துறுப்பிடிக்கின்றன.

(ii) 2010 மார்ச் 19 திகதி சபை நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 130,862 ஆன துண்டுக் கல் இயந்திரம் மீளாய்வாண்டு இறுதிவரையும் பாவனைக்கு எடுக்காது பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

(அ) ஊழியர் கடன்

2014 ஆண்டில் 04 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 300,405 ஆன கடன் நிலுவை கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வள முகாமைத்துவம்

ஆளணி திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 09 நபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் அப்பதவிகளை முறையாக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இனங்காணப்பட்ட நட்டங்கள்

கந்தேகொட பாடசாலை குறுக்குப்பாதைக்கு பிணைக் கற்கள் பரப்புதல் மற்றும் கங்கொடகம கழுவாகஹஹேன பாதை அபிவிருத்தி செய்தல் எனும் 02 வேலைக்களுக்காக ரூபா 12,600 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நள்ளாளுகையும்

## 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கூட்டுத்தொகை ரூபா 34,473,265 ஆகவும், 03 செலவின விடயங்களின் எல்லை விஞ்சிய ரூபா 12,159,263 ஆகவும், 06 செலவின விடயங்களின் ரூபா 8,133,203 ஆன சேமிப்பும் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்ட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 389,755 செலுத்தப்பட்டிருந்தன.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டில் இறுதி வரை நடவடிகக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்